மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தமிழ் நாட்டில் 12,632 ஊராட்சிகளும், 591 பேரூராட்சிகளும் இருக்கின்றன. இவற்றில் 13,362 சமூகக் கல்வி நிலையங்கள் இருக்கின்றன. அதிகமாகவே இருக்கின்றன. ஒரு சில இடங்களில் இல்லை என்று சொன்னார்கள். கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். ஒவ்வொரு கூட்டு மன்றத்திற்கும் ரூபாய் 800 இதற்கான செலவுக்குச் சன்மானமாக சர்க்கார் கொடுக்கின்றது. இதுவே போதுமானது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களில் சமூக நல ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தரத்தை கிராம நல ஊழியர்களுடைய தரத்திற்குச் சமமாக உயர்த்துவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதைப் பற்றி பிறகு ஆலோசிக்கலாம்.

வில்லியர் காலனி கிராமத்தில் தெரு விளக்குகள்

*555 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், ரெட்டம்பேடு ஊராட்சியில் உள்ள வில்லியர் காலனி கிராமத்தில் தெரு மின்விளக்குகள் அமைப்பதில் காலதாமதம் ஏன்?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தின் வேறு பகுதிகளில் அமைக்கப் பட்டு எரியும் மின்விளக்குகளுக்கான எரி கட்டணம் நிலுவையில் இருப்பதால், மேலும் அதிகப்படியான மின்விளக்குகள் அமைப்பதற்கு மின்சார வாரியத்தின் விதிமுறைகள் இடம் தரவில்லையென்று மின்வாரியத்தின் கண்காணிப்புப் பொறியாளர் கூறியுள்ளார். மின்சார வாரியத்திற்கு சேர வேண்டிய எரிகட்டண தொகையை உடனே செலுத்தி, அதற்கான ரசீதை பொன்னேரியிலிருக்கும் மின்சார வாரிய உதவிப் பொறியாளரிடம் தாக்கல் செய்து, ரெட்டம்பேடு ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த

வில்லியர் காலனிக்கு தெரு மின்விளக்குகளுக்கு மின் இணைப்பு அளிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர் மாவட்ட ஆட்சித் தலைவரால் பணிக்கப்பட்டுள்ளார்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மேற்கண்ட காலனியில் இருளர் என்ற பிற்பட்ட ஜாதியினர் வசிக்கிறார்கள். ஆகவே, அந்த ஒரு காலனி மட்டும் இருட்டாக இருப்பது அவ்வளவு சரியாக இல்லை. தனியாக ஒரு சிறப்பு ஆணை பிறப்பித்து, அந்தக் காலனி முழுவதும் தெரு விளக்கு ஏற்படுத்துவதற்கு அரசு தனி ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான நடவடிக்கையை மாவட்ட ஆட்சியாளர் எடுத்திருக்கிறார். அந்த ஊராட்சி விதிகள்படி கட்ட வேண்டிய தொகையை கட்டவில்லை. கட்டிவிட்டால் உடனடியாக அந்தத் தெருவுக்கு விளக்கு போடப்படும். சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் அதில் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

படமாத்தூர்–திருப்பாச்சேத்தி சாலையில் தரைப் பாலம்.

* 556 **வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், படமாத்தூர்–திருப்பாச்சேத்திச் சாலையில் குறுக்கே கானூருக்கு அருகில் வைகையின் குறுக்கே ஒரு தரைப் பாலம் கட்டும் திட்டம் தற்பொழுது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாலத்துக்கான அஸ்திவார வேலை நடைபெற்று வருகிறது.

Low Cost Houses

*557 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to give priority to low cost housing; and

(*b*) if so, the details thereof?